# இலங்கைக் கடற்படை கப்பல் மோதி உயிரிழந்த மீனவரின் உடலை மறுபிரேதப் பரிசோதனை செய்ய உயர்நீதிமன்றம் உத்தரவு

By DIN | Published on : 17th November 2021 06:56 AM | அ+ அ அ- | |

இலங்கைக் கடற்படை கப்பல் மோதி உயிரிழந்ததாகக் கூறப்படும் கோட்டைப்பட்டினம் மீனவர் உடலை மறுபிரேதப் பரிசோதனை செய்ய சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்த பிருந்தா தாக்கல் செய்த மனு: கோட்டைப்பட்டினம் விசைப்படகு மீன்பிடி இறங்குதளத்தில் இருந்து எனது கணவர் ராஜ்கிரண், சுகந்தன் மற்றும் சேவியர் ஆகிய 3 பேரும் அக்டோபர் 19-ஆம் தேதி நடுக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அங்கு வந்த இலங்கைக் கடற்படை ரோந்து கப்பல், மீனவர்களின் படகு மீது மோதியது. இதில் படகு பழுதாகி நடுக்கடலில் மூழ்கியுள்ளது.

அப்போது இலங்கைக் கடற்படையினர், மீனவர்கள் சுகந்தன் மற்றும் சேவியர் ஆகியோரை மீட்டனர். கடலில் மூழ்கிய எனது கணவர் ராஜ்கிரண் 2 நாள்கள் தேடுதலுக்குப் பிறகு சடலமாக மீட்கப்பட்டார்.

ஆனால், கணவரின் உடலை பெட்டியில் எடுத்து வந்த இந்தியக் கடற்படையினர், என்னிடமும், உறவினர்களிடமும் முழுமையாகக் காட்டாமல் அடக்கம் செய்துவிட்டனர். இதனால், இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுகிறது. எனது கணவரின் சடலம் மீட்கப்பட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களில், அவரது முகத்திலும், உடலிலும் காயங்கள் இருந்தன.

எனவே, எனது கணவர் இறப்பு தொடர்பாக, தமிழக போலீஸாார் வழக்குப் பதிவு செய்யவும், அவரது உடலை மறுபிரேதப் பரிசோதனை செய்து உண்மையைக் கண்டறியவும் உத்தரவிட வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனு நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் முன் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, கோட்டைப்பட்டினத்தில் அடக்கம் செய்யப்பட்ட மீனவரின் உடலை, வட்டாட்சியர், காவல்துறையினர் முன்னிலையில் நவம்பர் 18 ஆம் தேதி மறுபிரேதப் பரிசோதனை செய்வதற்காக வெளியே எடுக்கவும், அதே இடத்தில் அரசு மருத்துவர்கள் சரவணன், செல்வகுமார் குழுவினர் மறுபிரேதப் பரிசோதனை செய்யவும் உத்தரவிட்டார்.

தொடர்ந்து நீதிபதி, மறுபிரேதப் பரிசோதனையின் போது, மனுதாரர் தரப்பில் ஓய்வுப் பெற்ற தடயவியல் அதிகாரி சேவியர் செல்வசுரேஷ் உடனிருப்பார். அவர், மீனவர் ராஜ்கிரண் சுடப்பட்டு இறந்தாரா அல்லது கடலில் மூழ்கி இறந்தாரா என்பதை தெளிவுப்படுத்தும் வகையில், அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டு விசாரணையை நவம்பர் 24 ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.